


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் கொளத்தூர், பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக K5 – பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.11.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீன் வள வாரியத்தின் தலைவர் டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் மற்றும் உறுப்பினர்கள் – ஏ.தாஜீதீன், என்.ஜே.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், வி.செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், எக்ஸ்.லெனின், கோ. மனோகரன், எம்.ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பிஎஸ்.ராஜா ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இச்சந்திப்பின்போது, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

### சென்னை மாநகராட்சி சார்பில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளையும் இலவச உணவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ. 16 -**

**சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை நேற்று (15ம் தேதி) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சியில் 10,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வரும் நிலையில், தூய்மைப் பணியாளர்கள் அதிகாலையே தங்கள் பணியைத் தொடங்க வேண்டிய சூழலில், பணிபுரியும் இடத்திற்கே உணவை எடுத்து வந்து சாப்பிடுவதில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து, சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளை உணவு வழங்கும் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது.

காலை, மதியம், இரவு என 3 வேளைகளிலும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.186.94 கோடி ஒதுக்கிடு செய்துள்ளது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனியார் நிறுவனமானது, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது.

காலை உணவில் இட்லி, போன்றவை, மதியம் ரசம், சாம்பார், கூட்டு, இரவு சப்பாத்தி அல்லது ரொட்டி உள்ளிட்டவை அடங்கும். இந்த உணவுகள், ஊட்டச்சத்து நிறைந்தவையாக இருக்கும்.

இந்நிலையில் சென்னையில் தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை இலவச உணவு வழங்கும் திட்டத்தை நவ. 15ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் தூய்மைப் பணியாளர்களை தனியார் வசம் ஒப்படைக்க அரசு ஆலோசனை செய்து வந்தது. இதனை எதிர்த்து தூய்மைப் பணியாளர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் போராட்டம் நடத்தினர். அதோடு தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யக்கோரியும், ஊதிய உயர்வு வழங்கக் கோரியும் கோரிக்கை விடுத்தனர்.



இப்படியான சூழலில் தற்போது தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் தினந்தோறும் மூன்று வேளை இலவச உணவு வழங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. முதல் கட்டமாக சென்னை மாநகராட்சியில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர்ப்புறம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் நலனைக் காக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதோடு இவர்களுக்கென தனி நலவாரியமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு தினந்தோறும் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

**அரசாணை வெளியீடு!**

இதன்படி காலை, மாலை மற்றும் இரவு வேளைகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு தரமான இலவச உணவு வழங்கப்படும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக சென்னை மாநகராட்சியில் பணி புரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பாணையில், “தூய்மைப் பணியாளர்கள் குப்பையை அள்ளும்போது தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதால், அதற்கான சிகிச்சையைப் பெற தனித் திட்டம் செயல்படுத்தப்படும். இவர்கள் சுய தொழில் தொடங்க விரும்பினால் அதற்கு ரூ.3.5 லட்சம் மானியமாக வழங்கப்படும். அதோடு பணியின்போது உயிரிழக்கும் தூய்மைப் பணியாளருக்கு ரூ.10 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.

**தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்!**

ரூ.5 லட்சம் மதிப்பிலான காப்பீட்டு திட்டம் அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தப்படும். தூய்மைப் பணியாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் வேலை செய்வதால், அவர்களின் பசியைப் போக்க வேண்டியது தமிழக அரசின் கடமை. ஆகையால் முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் இனி 3 வேளையும் இலவச உணவு வழங்கப்படும். படிப்படியாக இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்” எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு சென்னை மாநகராட்சி இலவச உணவு வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

### சேலம் மாவட்டத்தில்

# வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம், நவ.16-*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மிதிவண்டிகளை வழங்கினார்கள்.*

*பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-*

*முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். எதிர்கால தலைமுறையினர் ஆகிய மாணவ, மாணவிகள் உலகளாவிலான கல்வியைக் கற்று பயனடையும் வகையில் நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். துணை முதலமைச்சர் அவர்களால் நேற்றையதினம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*சேலம் மாவட்டத்தில் 2021-2022-ஆம் கல்வி ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற 51,058 மாணவர்களுக்கும். 55,123 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 1,06,181 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 2025-2026-ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும். 13,842 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.*

*நேற்றையதினம், சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 84 மாணவர்களுக்கும் மற்றும் 77 மாணவிகளுக்கும் மொத்தம் 161 மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து சேலம் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*முன்னதாக வேளாண்மைத்துறையின் சார்பில் தார்பாலின், பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு பரிசு, தானியங்கி முறையில் நுண்ணீர் பாசன தொகுப்பு மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் நடமாடும் காய்கறி விற்பனை வண்டி என மொத்தம் 15 பயனாளிகளுக்கு ரூ.1,88,360 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் தலா ரூ.2.5 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.40 இலட்சம் மதிப்பில் 16 கழிவுகள் சேகரிக்கும் வாகனங்களையும் அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலர் திரு.சின்னுசாமி, தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் திருமதி மஞ்சுளா, தலைமையாசிரியர் திருமதி அமுதா உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.*



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் 14.11.2025 நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” நடத்துவது குறித்து ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.ச.சண்முகம், கலைபண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி ச.வளர்மதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சுற்றுலாத் துறை ஆணையர் டி.கிறிஸ்துராஜ், சென்னை மாநகராட்சி துணை ஆணையர் எம்.பிருத்திவிராஜ், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ்.சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.